

மதுரை மாவட்டம், திருமங்கலம் அருகில் உள்ள முத்தப்பன்பட்டியில் அமைந்திருக்கும் முன்னாள் சபாநாயகர் சேடபட்டி இரா.முத்தையா அவர்களின் நினைவிடத்தில் தமிழ்நாடு தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா அஞ்சலி செலுத்தி உடல் நலக்குறைவால் சிகிச்சை பெற்று இல்லத்தில் ஓய்வெடுத்து வரும் முன்னாள் சபாநாயகர் சேடபட்டி இரா.முத்தையா அவர்களின் துணைவியார் சகுந்தலா அவர்களை நேரில் சந்தித்து நலம் விசாரித்தார். உடன் மதுரை தெற்கு மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் மற்றும் உறவினர்கள், கழகத்தினர் உள்ளனர்.

### காஞ்சி தந்த காவியத் தலைவனின் 56வது நினைவு நாள்!

# அறந்தாங்கியில் அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை!

## அமைச்சர் எஸ்.ரகுபதி தலைமையில் அமைதி ஊர்வலம்!

புதுக்கோட்டை, பிப். 7 -

புதுக்கோட்டை தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் பேரறிஞர் அண்ணா அவர்களின் 56வது நினைவு நாளை முன்னிட்டு, அறந்தாங்கி நகரச் செயலாளர் க.ராஜேந்திரன் ஏற்பாட்டில், புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளர், சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி தலைமையில் கழகத்தினர் கலைஞர் பேருந்து நிலையத்திலிருந்து ஊர்வலமாகச் சென்று அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்தனர்.

நிகழ்ச்சியில் மாநில தீர்மானக்குழு உறுப்பினர் மிசா. ராமநாதன், மாவட்டத் துணைச் செயலாளர்கள் ஞான.இளங்கோவன், அடைக்கலம், ஸ்ரீதேவி அண்ணாதுரை, மாவட்டப் பொருளாளர் அபுதாஹீர், ஆவுடையார் கோவில் வடக்கு ஒன்றியச் செயலாளர் உதயம் சண்முகம், தலைமைச் செயற்குழு உறுப்பினர் இரா.ஆனந்த், ஒன்றியச் செயலாளர்கள் சக்தி ராமசாமி, பொன்.கணேசன், எஸ்.எம்.சீனியார், வே.பொன்துரை, அழகு (எ) சிதம்பரம், அ.முத்து, வி.ஆர்.இளையராஜா, கீரமங்கலம் பேரூர்ச் செயலாளர் கே.சி.சிவக்குமார், மாநில பொதுக்குழு உறுப்பினர் வீரையா, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் த.மணிராஜன், மாவட்ட நெசவாளர் அணி தலைவர் பழனியப்பன், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.ஆர்.ராமசாமி, மாவட்ட சுற்றுச்சூழல் அணி தலைவர் முகமது யூனுஸ், மாவட்ட மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் பாத்திமா பீவி, மாவட்ட தொண்டரணி அமைப்பாளர் கருணாகரன், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் சக்திவேல்,

மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் விமலாதிராஜன், அறந்தாங்கி தொகுதி ஒருங்கிணைப்பாளர்கள் செந்தில்வேலன், கற்பகம் சந்திரசேகரன், மாரியப்பன், மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள் அன்பழகன், நசுருதீன், தமிழ் ராஜா, ஷாஜகான், அடைக்கல ராஜா, சின்னையா, குத்புதீன், ஜோதி, வரதராஜன், கருணாகரன், அறந்தாங்கி நகர நிர்வாகிகள் பழனிச்சாமி, ராமசாமி, அனந்தராமன், ராஜேந்திரன் மாவட்ட, ஒன்றிய, நகர, வட்ட கிளைக் கழக நிர்வாகிகள் உள்ளிட்ட ஏராளமான கழகத்தினர் கலந்து கொண்டனர்.

### டி.எம்.கதிர் ஆனந்த் எம்.பி. - சைதை சாதிக் - ஏர்போர்ட் பொன்னுசாமி சிறப்புரை!

# திருப்பத்தூரில் ஒன்றிய அரசைக் கண்டித்து மாபெரும் கண்டன பொதுக்கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் க.தேவராஜி எம்.எல்.ஏ. அறிக்கை!

திருப்பத்தூர், பிப். 7 -

திருப்பத்தூர் மாவட்டச் செயலாளர் க.தேவராஜி எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

திருப்பத்தூர் மாவட்ட தி.மு.க. சார்பில் தமிழ்நாட்டுக்கு நிதி ஒதுக்காத ஒன்றிய அரசைக் கண்டித்து மாபெரும் கண்டன பொதுக்கூட்டம் ஜோலார்பேட்டை ரெயில் நிலையம் அருகே நாளை (8.2.2025) நடக்கிறது.

கூட்டத்திற்கு மாவட்டக் கழகச் செயலாளர் க.தேவராஜி எம்.எல்.ஏ. தலைமை தாங்குகிறார்.



திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் அ.நல்லதம்பி, ஆம்பூர் சட்டமன்ற உறுப்பினர் அ.செ.வில்வநாதன், முன்னாள் மாவட்டப் பொறுப்பாளர் எம். முத்தமிழ்செல்வி, மாவட்ட அவைத்தலைவர் ஆர்.எஸ். ஆனந்தன், மாவட்ட துணைச் செயலாளர்கள் டி.கே. மோகன், ஆ.சம்பத்குமார், எஸ்.சாந்தி சீனிவாசன், மாவட்டப் பொருளாளர் கே.பி.ஆர்.ஜோதி ராஜன், மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் என்.கே.ஆர். சூரிய குமார்,

நகரச் செயலாளர் எஸ். ராஜேந்திரன் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் மாணிக்கம், சத்தியமூர்த்தி, அசோகன், ஆர்.டி.சாமுவேல் செல்லபாண்டியன் ஆகியோர் அனைவரையும் வரவேற்று பேசுகிறார்கள்.

கூட்டத்தில் நாடாளு மன்ற உறுப்பினர் டி.எம். கதிர் ஆனந்த், தலைமைக் கழகப் பேச்சாளர்கள் சைதை சாதிக், ஏர்போர்ட் பொன்னுசாமி ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

இக்கூட்டத்தில் மாவட்ட, நகர, ஒன்றிய, பேரூர்க் கழக நிர்வாகிகள் கலந்து கொள்கிறார்கள்.

முடிவில் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் வி.வடிவேல் நன்றி கூறுகிறார்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# உத்திரமேரூர் ஒன்றிய முன்னாள் செயலாளர் இரா.நாகன் மறைவு!

## அமைச்சர் ஆர்.காந்தி – க.சுந்தர் எம்.எல்.ஏ. – கழகத்தினர் அஞ்சலி!

காஞ்சிபுரம், பிப். 7 -

உத்திரமேரூர் ஒன்றியக் கழக முன்னாள் செயலாளரும், முன்னாள் பேரூராட்சி மன்றத் தலைவரும் - தலைமைச் செயற்குழு உறுப்பினருமான இரா.நாகன் (வயது 85) அவர்கள் நேற்று முன்தினம் (5.2.2025) காலை இயற்கையெய்தினார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

காஞ்சிபுரம் மாவட்டம் உத்திரமேரூரைச் சேர்ந்த கழக முன்னோடி இரா.நாகன் உத்திரமேரூர் பேரூர் வட்டக் கழகச் செயலாளராக தேர்வானார். பின்னர் அவர் உத்திரமே ரூர் பேரூர் கழகக் செயலாளரானார்.

1977 ஆம் ஆண்டு 2014 ஆம் ஆண்டு வரை 5 முறை உத்திரமேரூர் ஒன்றியக் கழகச் செயலாளராக சிறப்பான முறையில் பணியாற்றி முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் பாராட்டப்பட்டவர். 2014 முதல் தலைமைச் செயற்குழு உறுப்பினராக இருந்து வருகிறார். உத்திரமேரூர் பேரூராட்சித் தலைவராகவும், பேரூராட்சி துணைத் தலைவராகவும் இருந்துள்ளார்.

உத்திரமேரூர் வட்ட கூட்டுறவு பண்டக சாலை தலைவர், கூட்டுறவு நிலவள வங்கி இயக்குநர், கூட்டுறவு வீடு கட்டும் சங்க இயக்குநர் ஆகிய பொறுப்புகளிலும் இருந்துள்ளார்.

அவரது மறைவு செய்தி அறிந்தவுடன் கைத்தறித் துறை அமைச்சர் ராணிப்பேட்டை ஆர்.காந்தி, காஞ்சிபுரம் தெற்கு மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ., ஒன்றியச் செயலாளர்கள் உத்திரமேரூர் கெ. ஞானசேகரன், வாலாஜாபாத் சேகர், சாலவாக்கம் டி. குமார், கே.கண்ணன், சரவணன், திருக்கழுக்குன்றம் ஒன்றியக் குழுத் தலைவர் ஆர்.டி.அரசு, பேரூர்ச் செயலாளர் என்.எஸ்.பாரிவள்ளல், சி.வி.எம்.அ.சேகர், வெளிக்காடு ஏழுமலை, பேரூராட்சி தலைவர்எஸ். சசிகுமார், துணைத் தலைவர் இளமதி கோவிந்தராஜன், முன்னாள் பேரூராட்சி தலைவர் சுமதி குணசேகரன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் சஞ்சய் காந்தி, பாலமுருகன், எடமச்சி முரளி, மாவட்டப் பிரதிநிதி சச்சிதாஸ், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் குமரன் உள்ளிட்ட தி.மு.க. கட்சி கிளை கழகச் செயலாளர்கள், மன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் உள்ளிட்ட ஏராளமான கழகத்தினர் அவரது உடலுக்கு மலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர்.

**இறுதி நிகழ்வு!**

அன்னாரது இறுதிச் சடங்கு நிகழ்வுகள் நேற்று (6.2.2025) காலை 11 மணிக்கு உத்திரமேரூரில் நடைபெற்றன. மறைந்த இரா.நாகனுக்கு ராஜேஸ்வரி என்ற மனைவியும், தென்றல், உதயசூரியன் என்ற 2 மகன்களும், வெண்ணிலா என்ற ஒரு மகளும் உள்ளனர்.

மகன் நா.தென்றல் திருமணத்தை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும், மகன் உதயசூரியன் திருமணத்தை கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களும், மகள் வெண்ணிலா திருமணத்தை பேராசிரியர் - தயாளு அம்மையார் ஆகியோரும் தலைமை ஏற்று நடத்தி வைத்தனர்.

### தமிழகத்தை வஞ்சிக்கும் ஒன்றிய அரசைக் கண்டித்து

# தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மாபெரும் பொதுக்கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி. அறிக்கை!

தஞ்சாவூர், பிப். 7-

தஞ்சை வடக்கு மாவட்டம், பாபநாசத்தில் தமிழ்நாட்டை வஞ்சிக்கும் மோடி அரசுக்கு எதிராக நடைபெற உள்ள கண்டன ஆர்ப்பாட்டத்தில் கழக தோழர்கள் கலந்து கொள்ள மாவட்டச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி. அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு : -

நாளை (8.02.2025 - சனிக்கிழமை) மாலை 6.00 மணியளவில் தஞ்சை வடக்கு மாவட்டம், பாபநாசம் கீழ



வீதியில் கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பினை ஏற்று தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் ஒன்றிய அரசின் நிதிநிலை அறிக்கையில் தொடர்ந்து தமிழகத்தை வஞ்சிக்கும் மோடி அரசைக் கண்டித்து மாபெரும் கண்டன பொதுக்கூட்டம் நடைபெற உள்ளது.

கண்டன பொதுக்கூட்டத்தில் தலைமைக் கழக பேச்சாளர் மதுரை அலெக்சாண்டர், மாநில மாணவர் அணி துணை செயலாளர் மன்னை த.சோழராஜன், தலைமைக் கழக பேச்சாளர் முரசொலி மூர்த்தி ஆகியோர் கண்டன உரையாற்றுகின்றனர்.

அதுசமயம் தஞ்சை வடக்கு மாவட்டத்திற்குட்பட்ட முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, பகுதி மற்றும் பேரூர்ச் செயலாளர்கள், நிர்வாகிகள், மாவட்ட சார்பு அணிகளின் நிர்வாகிகள், முன்னாள், இந்நாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக பிரதிநிதிகள், கழக உடன்பிறப்புகள் தவறாது கலந்துக்கொள்ள வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு தஞ்சை வடக்கு மாவட்டச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி. அறிக்கை வெளியிட்டுள்ளார்.



# தி.மு.க. இளைஞர் அணி

## ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, தலைமைக் கழகத்தின் ஒப்புதலுடன், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் அமைப்புகளுக்கு, இளைஞர் அணி அமைப்பாளர்–துணை அமைப்பாளர்களை மாண்புமிகு துணை முதலமைச்சரும், கழகத்தின் இளைஞர் அணிச் செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மாவட்ட வாரியாக நியமித்து வருகிறார்.

மண்டலம்–2 க்கு உட்பட்ட மாவட்டங்களில் நியமிக்கப்பட்ட இளைஞர் அணியின் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், அந்தந்த மாவட்டச் செயலாளர், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், நடைபெறுகிறது. இரண்டாம் கட்டமாக கடலூர் கிழக்கு & கடலூர் மேற்கு ஆகிய மாவட்டங்களில் நடைபெறும் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்ட விவரம் வருமாறு:

| நாள் | நேரம் | கழக மாவட்டம் | இடம் |
|---|---|---|---|
| 09.02.2025 ஞாயிற்றுக்கிழமை | மாலை 3.00 மணி | கடலூர் மேற்கு | தொ.மு.ச. அலுவலகம், நெய்வேலி, கடலூர். |

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 01-02-2025



### தி.மு.க. அயலக அணி குவைத் தளபதி பேரவை சார்பாக

# அண்ணா நினைவு நாள்! மொழிப்போர்த் தியாகிகளின் வீரவணக்க நாள்!

## மேட்டுப்பட்டி ராஜா முகமது, விட்டுக்கட்டி மஸ்தான், கவிஞர் சாதிக் பாட்சா பங்கேற்பு!

குவைத், பிப். 7 -

குவைத் தலைநகரம் பாலிவுட் உணவகத்தில், அயலக அணி குவைத் தளபதி பேரவை சார்பாக பேரறிஞர் அண்ணா அவர்களின் 56 வது நினைவு நாள், மொழிப்போர் தியாகிகளுக்கு வீரவணக்க நாள் கடைப்பிடிக்கப்பட்டது.



அயலக அணி குவைத் தளபதி பேரவை சார்பில் நடைபெற்ற நிகழ்வை மேட்டுப்பட்டி ராஜா முஹம்மது தலைமையில் காஜா மைதீன் பாண்டி ஜாக்கி ஹுசேன் கடியாவயலா கருப்பையா முன்னிலையில் நடைபெற்றது,

கழக மூத்த முன்னோடிகள் அல் அவ்தா சாதிக் பாச்சா, கவிஞர் வீட்டுக் கட்டி மஸ்தான், உதவும் கரங்கள் திருவாரூர் அப்துல் மஜீத், திருச்சி முபாரக், சாகுல் ஹமீத், நெல்லை ஹனிபா, திருமா இருளப்பன், திருவாரூர் பகுருதீன், முகமது தவ்பிக், கூடல் நகர் சத்திரமனை அசன் முகமது, டி.எம்.சி.ஏ. சிராஜுதீன், ஓட்டுநர் சேவை மையம் த.மு.மு.க. அப்துல் லத்தீப், சமூக ஆர்வலர் ஸ்டீபன் ரொசாரியோ, தமிழ் நேசன், அமானுல்லா, நிசாம் அலீம், தமிழர் வாழ்வுரிமை கட்சியின் நிர்வாகிகள், கலகலப்பு நண்பர்கள் சரவணன், ஜான் மற்றும் சமூக ஆர்வலர்கள் அனைவரும் பெருந்திரளாக கலந்து கொண்டு வீரவணக்கம் நினைவு அஞ்சலி செலுத்தினார்கள்

அண்ணா வழியில் அயராது உழைப்போம் ஆதிக்க மற்ற சமுதாயம் அமைத்தே தீருவோம் வன்முறை தவிர்த்து வறுமையை வெல்வோம் இந்தி திணிப்பை என்றும் எதிர்ப்போம்

மாநிலத்தில் சுயாட்சி மத்தியில் கூட்டாட்சி கொள்கை முழக்கங்களை வழிமொழிந்து திராவிட மாடல் ஆட்சியின் ஒப்பற்ற தலைவர் தமிழ்நாட்டின் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் கரங்களை வளப்படுத்துவோம் கடல் கடந்தும் காப்போம், தமிழ் மொழி வளர்ப்போம் எதிர் வரும் 2026 சட்டமன்றத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையிலான கூட்டணி திராவிடர் மாடல் ஆட்சியின் தலைவராக முதல்வராக மு.க. ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்க அயராது பாடுபடுவோம் என்று உறுதிமொழி எடுக்கப்பட்டது.

### பட்டியலின மாணவர்களின்

# 38 ஆண்டுகளுக்கான கல்விக் கடன் தள்ளுபடி!

## முதலமைச்சருக்கு - ஆதித்தமிழர் பேரவைத் தலைவர் இரா.அதியமான் பாராட்டு!

சென்னை, பிப். 7 -

"பட்டியலின மாணவர்களின் 35 ஆண்டுகளுக்கான கல்விக் கடனை தள்ளுபடி செய்த முதலமைச்சர் அர்களுக்கு ஆதித் தமிழர் பேரவை நன்றி, பாராட்டுத் தெரிவித்துள்ளது.

இது குறித்து ஆதித் தமிழர் பேரவை நிறுவனத் தலைவர் இரா.அதியமான் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

கடந்த 3 ந் தேதி தமிழ்நாடு அரசு ஒரு முக்கிய அறிவிப்பை வெளியிட்டதன் மூலம் பட்டியலின மாணவர்களின் 38 ஆண்டுகளுக்கான (1972 முதல் 2010 வரை) கல்விக் கடன் தொகை ரூ 48 கோடியை தள்ளுபடி செய்துள்ளதற்கு ஆதித்தமிழர் பேரவை நன்றி தெரிவித்துக்



கொள்கிறது. கல்வி தான் சமூக மாற்றத்திற்கு கருவி என்பதை அறிந்த தமிழகம் 1972 களிலேயே ஊக்கத் தொகையுடன் கூடிய உயர் கல்விக்கான கடனுதவியும் வழங்கியிருக்கிறது தமிழ்நாடு அரசு.

இன்றைக்கு ஒன்றிய அரசாங்கம் கல்விக் கடன் கொடுப்பதை பெருமையாக சொல்லிக் கொள்வதை சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்பே கல்விக் கடனுதவியை வழங்கி சாதனை செய்திருக்கிறது தமிழ்நாடு அரசு என்பதையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

பட்டியலின மாணவர்களுக்கு அன்றைக்கு வழங்கிய கடன் உதவித் தொகையின் பலனால் அரசு பதவிகள் பெற்று இன்றைக்கு கல்வி பொருளாதாரத்தில் பட்டியல் சமூகத்தினரின் முன்னேற்றம் கணி சமாக அதிகரித்திருக்கிறது என்பதோடு பலரது வாழ்விலும் செழுமைபடுத்தியிருக்கிறது என்பதை நாம் எண்ணிப் பார்க்க கடமைப்படுவோம்.

மேலும் கடந்த காலங்களில் பயின்ற பட்டியலின மாணவர்களின் கல்விக் கடனுதவியை தள்ளுபடி செய்யக் கோரி கோரிக்கை வைத்திருந்தோம் அக்கோரிக்கை யில் ஒன்றான இக்கோரிக்கையை நிறைவேற்றிய தமிழ்நாடு அரசிற்கும் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே போல் 2009 ல் பட்டியலினத்திற்குள் வழங்கிய அருந்ததியர் உள் ஒதுக்கீடு மூலம் உயர்கல்வி, மருத்துவம் மற்றும் அதன் சார்ந்த படிப்புகளில் கல்விக் கடன் பெற்று ஏராளமானவர்கள் பயின்ற வந்த போதிலும் அவர்களுக்கான கல்விக் கடனுதவி தொகைகளையும் தள்ளுபடி செய்ய வேண்டுமென தமிழ்நாடு அரசை ஆதித்தமிழர் பேரவை கெட்டுக்கொள்கிறது.

இவ்வாறு இரா.அதியமான் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.



புதூர் பேரூராட்சி, 9வது வார்டு, அம்பேத்கார் தெருவில் சட்டமன்ற உறுப்பினரின் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.15 லட்சம் மதிப்பீட்டில் அங்கன்வாடி மைய கட்டிடம் கட்டுவதற்கு விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர், சட்டமன்ற சட்ட விதிகள் ஆய்வு குழுத் தலைவர், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஜி.வி.மார்க்கண்டேயன் அடிக்கல் நாட்டினார். நிகழ்வில் புதூர் பேரூராட்சி செயல் அலுவலர் செந்தில்குமார், புதூர் கிழக்கு ஒன்றியச் செயலாளர் செல்வராஜ், புதூர் மத்திய ஒன்றியச் செயலாளர் ராதாகிருஷ்ணன், புதூர் மேற்கு ஒன்றியச் செயலாளர் மும்மூர்த்தி, விளாத்திகுளம் சட்டமன்றத் தொகுதி தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் ஸ்ரீதர் உட்பட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.